கழக ஆட்சியில் - இந்து சமய அறநிலையத்துறையில்

9 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை மீட்டோம்!

முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டி!

சென்னை, ஆக.12 -

சென்னையில் நேற்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. "நாங்கள் தூக்கத்தைக் கலைத்து முழுமையாகக் களத்தில் நின்றதால்தான், 9,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான இந்து சமய அறநிலையத்துறைச் சொத்துக்களை மீட்டிருக்கின்றோம். அதுமட்டுமன்றி, பட்டா மற்றும் சிட்டா போன்றவற்றில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்ததையும் கண்டறிந்து, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம். எனவே, கும்பகர்ணத் தூக்கம் கொண்டிருக்கின்ற ஆட்சி, இந்த ஆட்சி" என்று குறிப்பிட்டார்.

பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ.வின் பேட்டி வருமாறு:-

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலின் சொத்துக்களைப் பாதுகாத்த ஆட்சி, திராவிட மாடல் ஆட்சிதான். 2016ஆம் ஆண்டிலேயே அந்தச் சொத்துக்களின் பத்திரப் பதிவிற்குத் தடை கோரி, அன்றைய மாவட்ட வருவாய் அலுவலர்உத்தரவிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, 2021ஆம் ஆண்டிலிருந்து வெவ்வேறு மாவட்டங்களில் அந்தப் பத்திரப் பதிவை மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடத்தப்பட்டன. ஆனால், அந்த அனைத்து முயற்சிகளையும் முறியடித்த ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம்!

தூங்கிக் கொண்டிருந்தீர்களா? என்று அறநிலையத்துறை அமைச்சர் கேட்கிறார். நாங்கள் தூக்கத்தைக் கலைத்து முழுமையாகக் களத்தில் நின்றதால்தான், 9,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான இந்து சமய அறநிலையத்துறைச் சொத்துக்களை மீட்டிருக்கின்றோம். அதுமட்டுமன்றி, பட்டா மற்றும் சிட்டா போன்றவற்றில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்ததையும் கண்டறிந்து, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம். எனவே, கும்பகர்ணத் தூக்கம் கொண்டிருக்கின்ற ஆட்சி, இந்த ஆட்சி என்பதை நான் பதிவு செய்கிறேன்.

கேள்வி: திருச்சி ஸ்ரீரங்கம் திருக்கோயில் கோபுரப் பணிகளைத் தாமதப்படுத்தியது தி.மு.க. அரசுதான் என்ற குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்திருக்கிறார்?

பதில்:ஸ்ரீரங்கம் கோபுரத்தைப் பொறுத்தவரை, 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அதன் ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளின் சில பாகங்கள் உதிர்ந்து, கோபுரம் சரிந்தது. அதை அறிந்தவுடனேயே, அன்றைய மாவட்ட அமைச்சராக இருந்த அருமை அண்ணன் கே.என். நேரு அவர்களும் நானும் நேரடியாகக் களத்திற்குச் சென்று ஆய்வு செய்தோம்.

மிகப்பெரிய தனவந்தர் ஜெயபால் என்பவர் 1.75 கோடி ரூபாய் செலவில்அதனைப் புதுப்பித்துத் தருவதற்கு அனுமதி கேட்டார்; ஒரே மாதத்தில் அவருக்கு அனுமதி வழங்கினோம்.

இந்தத் திறப்பு விழாவின்போது அவரே தெளிவாக ஒரு வீடியோ பதிவைசெய்திருக்கிறார். அந்த வீடியோ பதிவில்,

"அமைச்சர்கள் உடனடியாக ஆய்வு செய்து, அனுமதி வழங்கினார்கள். நாங்கள் 40 பேரைக் கொண்டு அந்தப் பணியை மேற்கொண்டோம். கரையான் பாதிப்பு அதிகமாக இருந்ததால் பணியாற்றியவர்களுக்கு அலர்ஜி ஏற்பட்டது. ஊடகத்துறை நண்பர்களையும் கேட்டுக் கொண்டார், இப்போது நீங்கள் கேட்கிறீர்கள்.3 ஆண்டுகளாக எவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகேஅந்தக் கோபுரத்தைச் வடிமைத்தோம் என்று, ஒரு நாளாவது வந்து கேட்டீர்களா? என்கிறார். கடந்த ஆட்சி முழு ஒத்துழைப்பைத் தந்தது என்றுஅந்த ஊடகப் பதிவிலேயே அவர் சொல்கிறார்!"

ஸ்டிக்கர் ஆட்சி!

இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கின்ற கோபுரங்கள், சமயபுரம் முதற்கொண்டு எடுத்துக்கொண்டால், மன்னாதி மன்னன் திராவிட மாடல் ஆட்சியின் நாயகனுடைய ஆட்சி.

பெயரை உச்சரிக்கும். ஆகவே, இந்தக் கோபுரம் எந்த வகையிலும் தாமதிக்கப்படவில்லை. எங்குமே இல்லாத அளவுக்கு அதிசயமாகச் செங்கற்களால் கொடுக்கையில் அமைக்கப்பட்ட கோபுரம் அது. அதனைக்கட்டுவதற்கு பாடுபட்ட அந்த நன்கொடையாளர் ஜெயபால் அவர்களுக்கு முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் என்ற முறையில் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஸ்டிக்கர் ஆட்சி' என்றவுடன் கோபப்படுகிறார்கள். இந்தக் கோபுரப் பணிகளையும் முழுமையாக நிறைவேற்றியது இந்த ஆட்சிதான். அதற்கு ஸ்டிக்கர் ஒட்டத்தான் அமைச்சர் சென்றிருக்கிறார்.

கேள்வி: தொடர்ச்சியாக இந்து சமய அறநிலையத்துறை உங்களுடைய காலத்தில் திறம்படச் செயல்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைக் முன்வைத்துக்கொண்டே இருக்கிறார்?

பதில்: பார்க்கலாம்... இவருடைய திறன் என்ன என்று ஒரு வருடத்தில் காட்டுவோம். ஒன்றுமில்லை, அதிகாரிகளை மிரட்டுவது, "எடுத்தேன், கவிழ்த்தேன்" என்று பேசுவதை மட்டுமே கையில் வைத்திருக்கிறார். திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றோம்.

அதை ஒரு கணம் அவர்கள் திருப்பிப் பார்த்தாலே, 50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய மக்கள் பணிகளை 5 ஆண்டுகளில் நிறைவேற்றிய ஆட்சி கடந்த திராவிட மாடல் ஆட்சி என்பது தெரியும்.

"ஆன்மீகம் என்றாலே திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு எதிரானது"என்றொரு பிம்பத்தைக் கட்டமைத்திருந்தார்கள். அந்தப் பிம்பத்தை அடித்துநொறுக்கிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்பதை நான் இங்கு பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

அமெரிக்கா உள்ளிட்ட 4 நாடுகளிலிருந்து

662 இந்திய பழங்காலப் பொருட்கள் மீட்பு!

மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு - ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆகஸ்ட் 12–

தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இந்திய பழங்கால கலைப்பொருட்கள் மற்றும் தொல்பொருட்களை மீட்டு வருவது, கோஹினூர் வைரம், அமராவதி பளிங்குச் சிற்பங்கள் உள்ளிட்ட இந்திய பாரம்பரியப் பொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் உள்ள இந்திய தொல்பொருட்கள் குறித்த விவரங்கள் தொடர்பாக மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

இந்திய பொக்கிஷங்கள் மீட்கப்பட்டுள்ளதா?

அதாவது, கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து திருடப்பட்ட 610 கலைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளனவா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன? கோஹினூர் வைரம், அமராவதி பளிங்குச் சிற்பங்கள் மற்றும் இடைக்காலத்தைச் சேர்ந்த பல்வேறு சிற்பங்கள், சிலைகள், கல்வெட்டுகள் போன்ற பழங்காலப் பொக்கிஷங்கள் இன்னும் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு மீட்டுக் கொண்டுவரப்படாமல் உள்ளனவா? அவற்றின் விவரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள் என்ன? மேலும், இந்தியாவில் இருந்து திருடப்பட்டு வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ள, இன்னும் மீட்கப்படாத தொல்பொருட்களின் பட்டியல் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை குறித்த தரவுகள் மத்திய அரசு மற்றும் இந்திய தொல்லியல் துறையிடம் (ASI) உள்ளதா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்துப் பூர்வமாக பதில் அளித்தார்.

அந்தப் பதிலில் :

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நான்கு நாடுகளிலிருந்து இதுவரை மொத்தம் 662 இந்திய தொல்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக அமெரிக்காவிலிருந்து 589 தொல்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியாவிலிருந்து 51, இங்கிலாந்திலிருந்து 21, நெதர்லாந்திலிருந்து 1 தொல் பொருள் என மொத்தம் 662 தொல்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காலனித்துவ காலத்தில் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களை மீட்பது தொடர்பான விவகாரங்களை மத்திய அரசு பல்வேறு தளங்களில் தொடர்ந்து எழுப்பி வருகிறது. அவற்றை மீட்ப தற்கான நடவடிக்கைகள், ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக பரிசீலித்து, பொருந்தக்கூடிய தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. சம்பந்தப்பட்ட நாடுகள் மற்றும் அரசுகளுக்கு இடையேயான பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பின் மூலம் இத்தகைய பொருட்களை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழுமையான பட்டியல் அரசிடம் இல்லை!

அதேநேரத்தில், கோஹினூர் வைரம், அமராவதி பளிங்குச் சிற்பங்கள் உள்ளிட்ட பொருட்களை மீட்பது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கான பதிலை மத்திய அரசு தனது பதிலில் குறிப்பிடவில்லை. காலனித்துவ காலத்தில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட் களை மீட்பது ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாக மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள பல அருங்காட்சியகங்கள் மற்றும் கலைக் கூடங்களில் இந்திய தொல்பொருட்கள் உள்ளன. மேலும், தனிநபர்களிடமும் இத்தகைய பொருட்கள் உள்ளன. ஆனால், வெளிநாடுகளில் உள்ள இந்திய தொல்பொருட்கள் குறித்த முழுமையான பட்டியல் அரசிடம் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்யப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த தொல்பொருள் இருப்பது குறித்து தகவல் கிடைக்கும்போது, அதை மீட்டு இந்தியாவுக்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட நாட்டிலுள்ள இந்திய தூதரகம் அல்லது இந்தியத் தூதரகப் பணியகம் மூலம் தேவையான நடவடிக்கைகள் தொடங்கப்படுகின்றன..

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த பணிச்சூழலுக்கு

மாணவர்களை தயார் படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், ஆகஸ்ட் 10, 2026 அன்று மக்களவையில், செயற்கை நுண்ணறிவின் விரைவான வளர்ச்சிக்கு ஏற்ப தாராளக் கலைக் கல்வியில் தொழில்நுட்ப அறிவு, அறநெறி, படைப்பாற்றல் மற்றும் விமர்சனச் சிந்தனையை ஒருங்கிணைத்தல், உயர்கல்வி நிறுவனங்களில் பல்துறை கல்வியை ஊக்குவித்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த பணிச்சூழலுக்கு மாணவர்களைத் தயார்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் கல்வித் துறை இணை அமைச்சர் டாக்டர் சுகந்த மஜூம்தார் அவர்கள் அளித்த பதிலில், தேசிய கல்விக் கொள்கை 2020ன் கீழ் முழுமையான, பல்துறை மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்ட உயர்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். கலை, படைப்பாற்றல் மற்றும் பகுப்பாய்வுப் பாடங்களுடன் செயற்கை நுண்ணறிவு, பெருந்தரவு பகுப்பாய்வு மற்றும் இயந்திரக் கற்றல் போன்ற நவீன தொழில்நுட்பத் துறைகளையும் ஒருங்கிணைத்து கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

பல்கலைக்கழக மானியக் குழுவின் பல்துறை உயர்கல்வி வழிகாட்டுதல்களின் கீழ், 202324 அகில இந்திய உயர்கல்வி ஆய்வின்படி, 500க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் 5,000க்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகளும் பல்துறை கல்வித் திட்டங்களை வழங்கி வருகின்றன. தேசிய கல்விக் கடன் கட்டமைப்பை 700க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் 7,500க்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகளும் ஏற்றுக்கொண்டு ள்ளன. இதன்படி, தாராளக் கலை மாணவர்கள் உட்பட மாணவர்கள் தங்கள் படிப்புக்கான மொத்த கல்விக் கடன்களில் 50 சதவீதம் வரை வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் சார்ந்த திறன் பாடங்கள் மூலம் பெற முடியும்.

ஸ்வயம் இணையவழிக் கல்வித் தளத்தில் 140க்கும் மேற்பட்ட இலவச செயற்கை நுண்ணறிவு சார்ந்த பாடங்கள் வழங்கப்பட்டு வருவதுடன், இதுவரை 50 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் அவற்றில் சேர்ந்துள்ளனர். மேலும், செயற்கை நுண்ணறிவுக்கான திறன் தயார்நிலைத் திட்டத்தின் மூலம் விமர்சனச் சிந்தனை, மின்னணு அறிவுத்திறன் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பணிச்சூழ லுக்குத் தேவையான திறன்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதம மந்திரி உயர் கல்வி இயக்கத்தின் கீழ் மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாகவும், பல்துறை கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்கள் திட்டத்தின் கீழ் 35 பல்கலைக்கழகங்களுக்கு தலா ரூ.100 கோடி ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், ஒன்றிய அரசின் கல்வித் துறை மாண்புமிகு இணை அமைச்சர் டாக்டர் சுகந்த மஜூம்தார் அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் பழங்குடியினர்

பாரம்பரிய மருத்துவ அறிவுக்கு உரிய உரிமைகள் பாதுகாக்கப்படுமா?

ஒன்றிய அரசிடம் மக்களவையில் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12 –

தமிழ்நாட்டில் ஆயுர்வேதம் மற்றும் மருத்துவ மூலிகைகள் தொடர்பான பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ள உள்ளூர் சமூகங்கள், பாரம்பரிய மருத்துவர்கள் மற்றும் பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு உரிய நியாயமான பலன்கள் கிடைப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அவர் எழுப்பிய கேள்வியில், தமிழ்நாட்டில், குறிப்பாக தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில், ஆயுர்வேதம் மற்றும் மருத்துவ மூலிகைகள் தொடர்பான பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ள பழங்குடியினர் மற்றும் உள்ளூர் சமூகங்களின் அறிவுசார் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் பெற வேண்டிய நியாயமான பலன்களை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மேலும், ஆயுஷ் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மூலிகை வியாபாரிகள் மற்றும் பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ள சமூகத்தின ருக்கு இடையே ஏற்படுத்தப்படும் பலன் பகிர்வு முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறைகள் என்ன என்பதையும், பாரம்பரிய அறிவை அனுமதியின்றி வணிகரீதியாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும்

அவர் கேள்வி எழுப்பினார்.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தகுதியுள்ள பழங்குடியினர் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு நிதியுதவி, ராயல்டி, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளனவா? அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால், மாவட்ட வாரியான விவரங்கள் என்ன ?

பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ளவர்களின் உரிமைகளை வலுப்படுத்தவும், நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தவும், அவர்களின் பாரம்பரிய அறிவுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பு வழங்கவும், அவர்களுக்கு உரிய நியாயமான இழப்பீடு மற்றும் பலன்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு மேற்கொள்ள உள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும்

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் இணை அமைச்சர் (தனி பொறுப்பு) பிரதாப்ராவ் ஜாதவ்விடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு

ஒன்றிய அரசு செயல்படுத்திய முக்கியத் திட்டங்கள் என்ன ?

மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12 -

கடந்த 3 ஆண்டுகளில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் வேளாண் மக்களுக்கு செயல்படுத்திய சிறப்பு திட்டங்கள் என்ன என்று மக்களவையில் திரு வண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விகள் வருமாறு:-

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் விவசாயிகளின் நலனுக்காக ஒன்றிய அரசு செயல்படுத்தியுள்ள முக்கிய மத்திய அரசுத் திட்டங்கள் என்ன? அவற்றின் விவரங்கள் திட்டவாரியாக என்ன?

(ஆ) இத்திட்டங்களின் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவு? இதில் வருமான மேம்பாடு, பாசனம், பயிர்க் காப்பீடு, நிறுவனக் கடன், வேளாண் இயந்திரமயமாக்கல் மற்றும் சந்தை அணுகல் ஆகியவற்றுக்கான ஆதரவு உள்ளிட்ட விவரங்கள் மாவட்ட வாரியாக என்ன?

(இ) இத்திட்டங்கள் வேளாண் உற்பத்தித்திறன், விவசாயிகளின் வருமானம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலன் ஆகியவற்றில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் மதிப்பீடு மேற்கொண்டுள்ளதா?

(ஈ) மாநிலத்தில் தகுதியுடையவிவசாயிகளிடையே இத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு, டிஜிட்டல் அணுகல், திட்டங்களின் ஒருங்கிணைப்பு (convergence) மற்றும் உரிய காலத்தில் பயன்கள் வழங்கப்படுதல் ஆகியவற்றை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

(உ) விவசாயிகளின் நலனை மேலும் வலுப்படுத்தவும், நிலையான வேளாண் வளர்ச்சியை தமிழ்நாட்டில் ஊக்குவிக்கவும் முன்மொழியப்பட்டுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு வேளாண் துறை இணை அமைச்சர் விரிவான பதில் அளித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆத்தூர் வடக்கு நகரம், தெற்கு நகரம் சார்பில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு நகர செயலாளர்கள் கே. பாலசுப்பிரமணியம், ஏ.ஜி.ராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் நகர நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு தினம்!

சி.சந்திரசேகரன் – லதா பாலு தலைமையில் புகழஞ்சலி!

அரியலூர், ஆக. 12 –

அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8 ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அரியலூர் மாவட்ட திமுக சார்பில், மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி மாவட்ட கழக அலுவலகத்தில்

அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திர சேகரன், லதாபாலு ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அதனை தொடர்ந்து நகர செயலாளர் இரா. முருகேசன் ஏற்பாட்டில் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த கலைஞர் திருவுரு வப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள்,

அதனைத் தொடர்ந்து, தமிழ் நாடு அரசு போக்கு வரத்துக் கழக பணிமனை முன்பு தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் பி.வி. அன்பழகன் தலைமையில் தொமுசவினர் தலைவர் கலைஞரின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அதனையும் தொடர்ந்து அரியலூர் டாஸ்மாக் தொமுச மாவட்ட சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ரெ. சங்கர் தலை மையில் டாஸ்மாக் தொமுச நிர்வாகிகள் கலைஞரின் 8வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினர் .

இந்நிகழ்ச்சிகளில் ஒன்றிய பொறுப்பாளர்கள் மா.அன்பழகன், தெய்வ. இளையராஜன் , பொதுக் குழு உறுப்பினர் இராபாலு, நகராட்சி துணை தலைவர் கலியமூர்த்தி, எஸ்.பி.மகேந்திரன், நகர அவைத் தலைவர் மாலா தமிழரசன், நகராட்சி கவுன்சிலர்கள் ராஜேஷ், ஜி.ஜே கண்ணன் ,மு.க.புகழேந்தி,

ஜெ.சரவணன், முன்னாள் கவுன்சிலர்கள் மா.இராஜேந்திரன், சண்முகம், ஜ.பி.மணிவண்ணன், பூக்கடை ராமு, ஆ.குணா, குமார், உத்திராபதி, மணிவண்ணன், சரவணன், சுந்தர்,முத்து, உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.